இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 21-11-2025

# தமிழ்நாட்டுக்கு ஏன் வருகிறார் மோடி?

தமிழ்நாட்டுக்கு ஏன் வருகிறார் மோடி? தேர்தல் வரப் போகிறது அல்லவா? அதனால் வருகிறார். இனி அடிக்கடி அவரை உள்நாட்டில் பார்க்கலாம்! தமிழை, தமிழரை, தமிழ்நாட்டை அவமானப்படுத்துவதுதான் பா.ஜ.க.வின் வழக்கம் ஆகும். சில வாரங்களுக்கு முன்னால் பீகாரில் என்ன பேசினார் பிரதமர் மோடி?

**"கர்நாடகா, தெலங்கானாவைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்கள், பீகார் மக்களைத் தொடர்ந்து அவதூறு செய்து வருகிறார்கள். தமிழ்நாட்டிலும் பீகார் மக்கள் தொடர்ந்து துன்பத்துக்கு உள்ளாகி வருகிறார்கள். அத்தகைய தலைவர்களை அழைத்து வந்து பீகாரில் வாக்கு கேட்கிறார்கள்" என்று பிரதமர் மோடி பேசினார். இதனை விட வன்மம் கலந்த வார்த்தை இருக்க முடியுமா? இந்தியப் பிரதமர் பேசும் அழகா இது? அவர் வகிக்கும் பதவிக்கு இது தகுதியான பேச்சா?**

**பீகார் மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் தமிழ்நாட்டில் எந்த இடத்தில், எப்போது தாக்கப்பட்டார்கள் என்று சொல்ல முடியுமா மோடியால்?**

அங்கே அவரைக் கொல்கிறார்கள், இங்கே இவரை அடிக்கிறார்கள் என்று ஏதாவது பீதியைக் கிளப்பி ஓட்டுத் திருட்டு செய்ய வேண்டும் என்பதைத் தவிர இவர்களுக்கு எந்த நோக்கமும் இல்லை. 'தமிழ்நாட்டில் பீகாரிகளை அடிக்கிறார்கள். அந்த தமிழ்நாட்டுத் தலைவர்களோடு தேஜஸ்வீ சேர்ந்துள்ளார். எனவே தேஜஸ்வீக்கு வாக்களிக்காதீர்கள்' என்பதுதான் பிரதமர் நிலைநாட்ட நினைக்கும் கெட்ட எண்ணம் ஆகும்.

இதனை தமிழ்நாட்டு மக்கள் ஏற்க மாட்டார்கள் என்பதை விட, பீகார் மக்களும் ஏற்க வில்லை என்பதன் அடையாளம்தான் பா.ஜ.க.வை விட தேஜஸ்வீ கட்சி அதிகமான வாக்குகளை வாங்கி இருப்பது ஆகும்.

பா.ஜ.க. கூட்டணியில் அதிகபட்சமாக பா.ஜ.க. 20.08 விழுக்காடு வாக்குகளைத்தான் பெற்றுள்ளது. ஆனால் மகாகத்பந்தன்' கூட்டணியில் அதிகபட்சமாக தேஜஸ்வீயின் ஆர்.ஜே.டி. கட்சி 22.96 விழுக்காடு வாக்குகளைப் பெற்றுள்ளது. எனவே மோடியின் வாதங்களை பீகார் மக்களே ஏற்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

**"தமிழ்நாட்டில் பீகாரிகள் தாக்கப்படுகிறார்கள் என்று தமிழ்நாட்டுக்கு வந்து சொல்வாரா பிரதமர் மோடி?"** என்று கேட்டார் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின். சொல்ல பிரதமருக்கு தைரியம் இருக்காது. இங்கு வந்ததும் திருக்குறள் சொல்வார்கள். தமிழில் பேச முடியவில்லையே என்று வருத்தப்படுவார்கள். தமிழ்நாட்டைத் தாண்டினால் தமிழர்களையும், தமிழ்நாட்டையும் அவமானப் படுத்துவார்கள்.

**1. நாடாளுமன்றத்தில் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் 'தமிழர்கள் நாகரிகமற்றவர்கள்' என்றார்.( - 2025 மார்ச்.) பின்னர் அவரே மன்னிப்புக் கேட்டார்.**

**2. ஒடிசா முதலமைச்சராக இருந்த நவீன் பட்நாயக்கிற்கு நெருக்கமான தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி பாண்டியனை பா.ஜ.க. மோசமாக விமர்சனம் செய்தது.**

**3."தமிழகத்தைச் சேர்ந்த பாண்டியனை நாங்கள் பொறுத்துக் கொள்ள மாட்டோம். தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் ஒடிசாவை ஆட்சி செய்வதா?" என்றார் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா. (- 2024 மே.)**

**4. "ஒடிசாவில் பூரி ஜெகநாதர் கோயிலில் இருக்க வேண்டிய புதையல் சாவி தமிழ்நாட்டிற்குச் சென்றுவிட்டது" என சொல்லி தமிழர்களைத் திருடர்கள் என்பது போல வர்ணித்தார் பிரதமர் மோடி (- 2024 மே.)**

**5.பாண்டியனை போல ஒருவரைச் சித்தரித்து, தமிழரைப் போல வேட்டி சட்டை அணிவித்து, வாழை இலையில் பழைய சோறு வைப்பது போல ஒடிசா சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. வீடியோ வெளியிட்டது.**

**6. தங்கள் மொழியில் டி.வி. பார்த்து கொண்டிருக்கும் வீட்டிற்குள் நுழையும் பாண்டியன் போன்ற தோற்றம் கொண்டவர், ரிமோட்டை பறித்து தமிழ் சேனலை மாற்றுவது போலவும் அவதூறு வீடியோ வெளியிட்டு தமிழர்களை பா.ஜ.க. கேவலப்படுத்தியது.**

**7. 2022 டெல்லி குடியரசு தின அணிவகுப்பில் மருது சகோதரர்கள், வேலுநாச்சியார், வ.உ.சி., பாரதியார் ஆகியோரின் உருவங்கள் இடம் பெற்ற தமிழ்நாடு அரசின் அலங்கார ஊர்தியை புறந்தள்ளினார்கள். இந்த ஊர்திக்கு இடமில்லை என்று மறுத்தார்கள்.**

**8. "தமிழ்நாட்டில் இருந்து வந்து கர்நாடகாவில் வெடிகுண்டு வைக்கிறார்கள்" - என்று ஒன்றிய அமைச்சர் ஷோபா பேசினார். (- 2024 மார்ச்.) பின்னர் மன்னிப்பு கேட்டார்.**

**9. "தமிழர்கள் நன்றி மறந்தவர்கள். மோடி தமிழை புகழ்ந்தபோது அதைக்கொண்டாடவில்லை" - என்றார் பொன்.ராதாகிருஷ்ணன் (- 2019 செப்டம்பர்.)**

**10. கொரோனா 2-ஆவது அலையின் போது தமிழக அரசிடம் கலந்து ஆலோசிக்காமல், சென்னையில் உற்பத்தி செய்யப்பட்ட 45 டன் ஆக்சிஜன் ஆந்திரா, தெலுங்கானாவுக்கு ஒன்றிய அரசின் உத்தரவின் பேரில் அனுப்பப்பட்டது. (2021 ஏப்ரல்).**

**11.தமிழ்நாட்டுக்கு எந்த சிறப்புத் திட்டமும் அறிவிக்கப்படுவது இல்லை.**

**12. ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு என்ற பெயரே இருப்பது இல்லை.**

**13. மூன்று இயற்கைப் பேரிடருக்கும் நிவாரண நிதி இல்லை.**

**14. பள்ளிக் கல்விக்குத் தர வேண்டிய ரூ.2000 கோடியைத் தரவில்லை.**

**15. தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரால் தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்கச் சதி.**

**16. பிரதமர் சொல்ல முடியாததை ஆளுநர் ரவி மூலமாகச் சொல்ல வைப்பது.**

– இதுதான் தமிழுக்கு, தமிழர்களுக்கு, தமிழ்நாட்டுக்கு பிரதமர் மோடியும், ஒன்றிய அமைச்சர்களும், ஒன்றிய பா.ஜ.க. அரசும், பா.ஜ.க. கட்சியும் செய்யும் தொடர் தாக்குதல்கள் ஆகும்.

**இதை எல்லாம் தமிழ்நாட்டு மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்து தமிழ்நாட்டுக்கு வருகிறார் பிரதமர் மோடி. தலைவர் கலைஞர் வரிகளில் சொல்ல வேண்டுமானால், 'நீங்கள் நாடி வரும் கோழை உள்ளம் கொண்ட நாடு இது அல்ல'.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், டி.ராஜா அவர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக மீண்டும் தேர்வு செய்யப்பட்டதையொட்டி சந்தித்த போது, முதலமைச்சர் அவர்கள், சால்வை அணிவித்து அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தார். உடன் நாடாளுமன்ற கழகக்குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் உள்ளனர்.

### சென்னையில் வாக்காளர்

# சிறப்பு தீவிர திருத்தத்தை எதிர்த்து நவ. 24ஆம் தேதி ஆர்ப்பாட்டம்!

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் எம்.பி. அறிவிப்பு!

சென்னை, நவ.21-

சென்னையில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்தை எதிர்த்து நவ.24ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்த இருப்பதாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

சென்னை அசோக்நகரில் உள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அலுவலகத்தில் கட்சியின் தலைவர் திருமாவளவன் நிருபர்களை சந்தித்து பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-



பீகாரில் பா.ஜனதா கூட்டணி யாரும் எதிர்பார்க்காத வகையில் 200க்கும் மேற் பட்ட இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இந்த தேர்தல் நேர்மையாக நடைபெற வில்லை என்ற எண்ணம் மக்களிடம் எழுந்துள்ளது. தேர்தல் ஆணையத்தின் மீதான நம்பகத் தன்மை நொறுங்கி போய் உள்ளது. புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ. ஆர்.) திட்டமிட்ட சதி நடவடிக்கை. தமிழ்நாட்டில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்தை தேர்தல் ஆணையம் கைவிட வேண்டும். நடைமுறை சிக்கல் ஏராளம் உள்ளது. பா.ஜனதா, தேர்தல் ஆணையத்தின் கூட்டு சதியை முறியடிப்போம். வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் வேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்து வருகிற 24ஆம் தேதி சென்னையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும். ஜனநாயக சக்திகள் இது தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல தேசிய அளவில் ஆபத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை.

கடந்த 2002ம் ஆண்டு வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்தை நடத்தியதாகதேர்தல் ஆணையம் பொய் கூறுகிறது. எந்த அதற்கான எந்த ஆதாரமும் இல்லை. சுப்ரீம் கோர்ட்டு கோரியும் அதற்கான ஆதாரத்தை தேர்தல் ஆணையம் இதுவரையில் சமர்ப்பிக்க வில்லை. வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் மூலம் வேண்டியவர் வேண்டாதவர்கள்கள், என்று வாக்காளர்களை பட்டியலில் இருந்து நீக்கம் செய்வதால், எதிர்ப்பு வாக்குகளை வாக்களிக்க விடாமல் தடுப்பதற்கான நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். இதற்கு எதிராக அனைத்துத் தரப்பு ஜனநாயக சக்திகளின் குரலும் ஓங்கி ஒலிக்க வேண்டும். வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்தில் உள்ள நடைமுறை சிக்கல்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்துக் காட்டி உள்ளார்.

தி.மு.க. எதிர்ப்பு என்பதை மட்டுமே வைத்து த.வெ.க. அரசியல் செய்கிறது. அவர்கள் இன்னும் அரசியல் களத்தில் முழுமையாக வில்லை. த.வெ.க. எதிர்க்க வேண்டியது தேர்தல் ஆணையம் மற்றும் பா.ஜனதாவை மட்டுமே. ஆனால், அக்கட்சி தலைவர் விஜய் பேசிய வீடியோவில் பா.ஜனதா, தேர்தல் ஆணையம் பற்றி எதுவும் பேசவில்லை. தமிழ்நாட்டில் வாக்காளர் சிறப்புத் தீவிர திருத்தத்தை தடை செய்ய வேண்டும் என வழக்கு தொடர்ந்துள்ளோம்.

இவ்வாறு தொல்.திருமாவளவன் எம்.பி. கூறினார்.

### தாய், தந்தையை இழந்த 4 குழந்தைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்திய

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டின் தாயாக உயர்ந்து நிற்கிறார்!

## விவசாயிகள் – தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் பாராட்டு!

சென்னை, நவ. 21 -

"தாய், தந்தையை இழந்த நான்கு குழந்தைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்திய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் தாயாக உயர்ந்து நிற்கிறார்" என்றுவிவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரத்தை அடுத்த பூட்டை கிராமத்தைச் சேர்ந்த கமலக்கண்ணன் என்ற கூலித் தொழிலாளிக்கு லாவண்யா உட்பட நான்கு குழந்தைகள் உள்ள நிலையில் ஏற்கனவே தாய் மறைந்து உள்ளார். இந்த நிலையில் அவர்களுக்கு இருந்த ஒரே பாதுகாப்பு தந்தையான கமலக்கண்ணன் அவர்களும் கடந்த 14ஆம் தேதி மறைந்துள்ளார். தாயையும், தந்தையும் இழந்து அனாதையாக நின்ற நான்கு குழந்தைகளுக்காக ஆதரவாக அந்த கிராமத்து மக்கள் ஒன்று சேர்ந்து மறைந்த கமலக்கண்ணனின் இறுதி சடங்கை செய்து முடித்துள்ளனர். நிலைமையை அறிந்து ஆதரவற்று, அச்சத்தோடு நின்ற நான்கு குழந்தைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களை காக்கிற தாயாக உயர்ந்து நிற்கிறார்.

தாய், தந்தை, உற்றார், உறவினர் ஆதரவின்றி அம்போ என்று நின்ற அந்த குழந்தைகளின் நிலை குறித்து நாளேட்டில் வந்த செய்தியை அறிந்த உடன் உடனடியாக மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தி அந்த குழந்தைகளை நேரில் சென்று சந்தித்து தேவையான அனைத்தையும் செய்து தரும்படி உத்தர விட்ட முதலமைச்சர், தானே தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி உள்ளார். மூத்த மகளான லாவண்யாவிடம் முதலமைச்சர் பேசி ஆறுதல் கூறியதோடு அரசு வேலை வழங்கப்படும் என்றும் அவர்களுக்கு ஒரு வீடு ஏற்பாடு செய்து தரப்படும் என்றும் உறுதியளித்துள்ளார். மற்ற குழந்தைகளின் கல்விக்கு ஏற்பாடு செய்யப் படும் என்கிற உறுதியையும் அளித்துள்ளார். அதனை தொடர்ந்து அந்த மாவட்டப் பொறுப்பு அமைச்சரும், பொதுப்பணித் துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் அந்த குழந்தைகளை நேரில் சந்



தித்து ஆறுதல் கூறியிருப்பது அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறது. இது அந்த குழந்தைகளின் எதிர் காலத்தை உறுதி செய்துள்ளது.

ஒரு நாளேட்டில் வந்த செய்தி அறிந்து ஆதரவற்று, அச்சத்தோடு நின்ற நான்கு குழந்தைகளின் எதிர்காலத்தை உறுதிப்படுத்திய முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களை காக்கிற தாயாக உயர்ந்து நிற்கிறார்.

பெற்றப் பிள்ளைகளின் அரவணைப்பின்றி, மன உளைச்சலுக்கு ஆளாகி இருக்கிற முதியோர்களின் நிலைமைகளை உணர்ந்து அவர்களின் மன நிலையை மடைமாற்றம் செய்திட அவர்கள் இறுதி காலத்தில் மகிழ்ச்சியாக இருந்திட அன்பு சோலை திட்டத்தை அண்மையில் 10.11.2025 அன்று திருச்சியில் தொடங்கி வைத்து முதியோர்களுக்கு ஒரு ஊன்றுகோலாக நம்முடைய முதலமைச்சர் விளங்கி வருகிறார். ஒவ்வொரு பெற்றோர்களின் இறுதி காலம் என்பது ஒரு கொடூரமான காலமாக மாறி வருகிறது. இப்படிப்பட்ட நிலையில் அவர்களுக்கான ஒரு திட்டத்தை அறிவித்திருப்பது முதலமைச்சரின் தாய் உள்ளத்தை காட்டுகிறது.

துப்புரவுப் பணியாளர்களுக்கு வீடு வழங்கும் திட்டம், மூன்று வேளையும் வயிறார உணவு வழங்கும் திட்டத்தை அறிவித்திருப்பது போன்றவை எல்லாம் தாய் உள்ளத்தின் வெளிப்பாடாகும்.

இப்படி தமிழ்நாட்டில் பாதிக்கப்படுகிறவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், எங்கே இருந்தாலும் அவர்களுக்கு தாயாக நான் இருக்கிறேன் என்று ஆறுதல் அளிப்பவர் தான் தமிழ்நாட்டுடைய முதலமைச்சர். அவருடைய பணிகள் தொடர விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வாழ்த்துகிறது.

இவ்வாறு பொன்.குமார் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



நீலகிரி மாவட்டம், குந்தா வட்டம், எமரால்டு அரசு மருத்துவமனை வளாகத்தில், மாவட்ட நிர்வாகம் மற்றும் ஹெல்ப்பிங் ஹட்ஸ் தொண்டு நிறுவனம் இணைந்து மாவட்டத்தில் முதன்முறையாக அமைக்கப்பட்ட, மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான தங்கும் இல்லத்தினை, நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில் ரிப்பன் வெட்டி திறந்து வைத்து, பார்வையிட்டார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி என்.எஸ்.நிஷா, உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஸ்ரீசரவணன், இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) மரு.ராஜசேகர் உட்பட பலர் உள்ளனர்.